<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் நாள் திங்கள்கிழமை

<u>இடைநிலை மனுஎண்.9/2023</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.186/2019</u>

ரமேசாபீ @ ரமிஜாபீபி (died) ......வாதி

1. முகம்மதுகான்
2. சலிம்கான்
3. கலிலுல்லாகான்
4. நாஜினிபேகம்
5. நர்கீஸ் பானு

..... மனுதாரர்கள்/ புரோபோஸ்டு பார்ட்டி/ இறந்த வாதியின் வாரிசுகள்

/ எதிர் /

1. கருப்பன் (இறந்தார்)
2. கருப்பையா
3. புஷ்பா
4. முத்தம்மாள்
5. ரெங்கசாமி (இறந்தார்)
6. கலியன்
7. தங்கராஜ் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 17.04.2024–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. இராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1, 5ம் எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 2 முதல் 4 மற்றும் 6, 7ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், எடுத்துரைத்த மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது மனுதாரர்கள் /வாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி மனுவில் கண்டவாறு I.A.No. 4 / 2020 நாள் 11.12.2020 ம் தேதி சமூகம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுப்படி வழக்குரையை திருத்தம் செய்ய மனுதாரருக்கு அனுமதி வழங்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:53:09 +0530

2. மனுதாரர்கள்/ புரோபோஸ்டு பார்ட்டி/ இறந்த வாதியின் வாரிசுகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்

மனுதாரர்/3d Proposed Party இறந்த வாதியின் 3 வது வாரிசு என்றும், மற்ற மனுதார்கள்/Proposed Party/ இறந்த வாதியின் வாரிசுகளுக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் மீது மனுதாரரின் தாயார் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரின் தாயார் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகளை சேர்க்க சமூகம் நீதிமன்றத்தில் I.A.No. 4 /2020 நம்பரில் மனுக்கொடுக்கப்பட்டு மேற்படி மனு சமூகம் நீதிமன்றத்தால் 11.12.2020ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே சமூகம் நீதிமன்ற உத்தரவு படி இந்த வழக்கு பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே I.A.No. 4/2020 நாள் 11.12.2020 தேதி சமூகம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுப்படி இந்த மனுவில் கண்டவாறு இந்த வழக்கு பிராதை திருத்தம் செய்ய உத்தரவாக வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தால் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

6. தீர்வு

அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொருத்து விளம்புகை மற்றும் சுவாதீனம் ஒப்படைக்க பரிகாரம் கோரி 25.02.2011ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர் ஆகியுள்ளதும், மனுவில் காரணமாக மனுதாரரின் தாயார் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகளை சேர்க்க சமூகம் நீதிமன்றத்தில் I.A.No. 4 /2020 நம்பரில் மனுக்கொடுக்கப்பட்டு மேற்படி மனு சமூகம் நீதிமன்றத்தால் 11.12.2020ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்கண்ட உத்தரவு படி இந்த வழக்கு பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளதை ஆராய்கையில் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கது என்று கருதியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:53:34 +0530

தரப்பில் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டும் நீதிமன்ற ஆஜரின்மையால் தோன்றதரப்பினர் ஆகியுள்ளதும், மேலும் இம்மனுவானது I.A.No.4/2020 ன் தொடர்ச்சியான மனு என்பதும், மேற்படி மனு நீதிமன்றத்தால் 11.12.2020 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எந்தவகையிலும் இழப்போ பாதிப்போ ஏற்படபோவதில்லை எள்று கருதியும், மாறாக மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 10-ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:53:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:53:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.